## அட்சயப் பாத்திரத்தை பிடுங்கிக்கொண்டு பிச்சைப் பாத்திரத்தைக் கொடுக்கிறீர்கள்!

# மாணவர்களின் எதிர்காலத்தை நாசமாக்கும் புதிய கல்விக் கொள்கையை ஒருபோதும் ஏற்க முடியாது!

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆவேசம்!

புதுடெல்லி, ஆக. 3 -

**அட்சய பாத்திரத்தை பிடுங்கிக் கொண்டு, மணிமேகலையின் கையில் பிச்சைப் பாத்திரமா? மாநில உரிமை பறிக்கும் ஒன்றிய அரசை எதிர்த்து கடைசிவரை போராடுவோம் என்று நாடாளுமன்றத்தில் கனிமொழி கருணாநிதி உரையாற்றுகையில் ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.**

**நாடாளுமன்ற மக்களவையில் நிதி நிலை அறிக்கையில் கல்வி தொடர்பான விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் உரையாற்றினார்.**

**அவரது உரையில் தெரிவித்துள்ளதாவது:-**

“அறிவும் மானமும் மனிதர்க்கு அழகு என்றார் பெரியார். அறிவு என்பது கல்வியின் வழியாக பெறுவது. கல்வியின் வழியாக பெற்ற அறிவின் வழியாக சுயமரியாதையும் மானமும் என்ன என்பதை மக்கள் உணர்ந்துகொள்வார்கள்.

இது இரண்டும் நடந்துவிடக் கூடாது, ஒடுக்கப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள் என்றும் ஒடுக்கப்பட்டே, ஒதுக்கப்பட்டே இருக்க வேண்டும் என்பதால் எங்களுக்கு வழி வழியாக கல்வி மறுக்கப்பட்டது.

இன்று அந்த வழியிலே, நியாயங்களை மறுத்தவர்கள் ஆட்சி நடத்தும் சூழ்நிலையில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம். பா.ஜ.க.வின் 2014 தேர்தல் அறிக்கையிலே, ‘இன்வெஸ்ட்மென் இன் எஜுகேஷன் இஸ் ஹையஸ்ட் ரிடர்ன்’ என்று சொல்லியிருந்தார்கள். அந்த கல்வியில் முதலீட்டு தினம் எதுவாக இருக்கும் என்று நாங்கள் காத்திருக்கிறோம்.

**கல்விக்கான ஒதுக்கீடு ஒன்றிய அரசில் குறைவு!**

யு.பி.ஏ. ஆட்சியிலே மொத்த ஜி.டி.பி.யிலே 4.77 % கல்விக்காக ஒதுக்கப்பட்டது. தமிழ்நாட்டில் எங்கள் முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக தமிழக ஜி.டி.பி.யில் 12% ஒதுக்கீடு செய்கிறார். ஆனால் இந்த அரசாங்கம் நிதி நிலை அறிக்கையில் இந்த ஆண்டு 2.5% மட்டுமே கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அருகே இருக்கும் பூடான் நாட்டில் 8 சதவிகிதம் ஒதுக்கீடு செய்கிறார்கள். ஆனால் இந்தியாவில் இன்னும் 6% கூட நாம் இன்னும் தொடவில்லை. கல்வி என்பது பொதுப் பட்டியலிலே இருக்கிறது. (கன்கரன்ட் லிஸ்டு) ஆனால் இந்த ஒன்றிய அரசாங்கம் கல்வி ஏதோ தனக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட ஒன்றாக நடந்துகொள்கிறது.

கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிற நிதியில் 60% ஒன்றிய அரசு தரவேண்டும். 40% மாநில அரசு தர வேண்டும். ஆனால் உண்மை நிலை என்னவென்றால், செஸ் 4% ஹெல்த் அண்ட் எஜுகேஷன் என்று வாங்குகிறார்கள். மாநிலங்களில் இருந்து சாமானிய மக்களிடம் இருந்து இப்படி வாங்குகிறார்கள். இதில் இருந்து கணிசமான நிதியை கல்விக்காக ஒதுக்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கப் போனால், கிட்டத்தட்ட 50% வரை கல்விக்கான நிதியை வழங்கிக் கொண்டிருப்பது மாநில அரசாங்கம்தான். கல்வி பொதுப்பட்டியலில் இருக்கிறது. எங்களிடம் இருந்து ஜி.எஸ்.டி. என்று சொல்லி, வரி என்று சொல்லி நிதியை எல்லாம் வாங்கிக் கொள்கிறீர்கள்.

**ஒன்றிய அரசின் சர்வாதிகாரத்தனம்!**

ஆனால் எங்களுக்கென்று மாநிலங்களுக்கென்று தரவேண்டிய நிதியை வைத்துக் கொண்டு வழங்க மறுக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது என்று கேட்டால் மணிமேகலையிடம் இருந்த அட்சய பாத்திரத்தை பிடுங்கிக் கொண்டு, பிச்சைப் பாத்திரத்தைக் கொடுத்ததைப் போல இன்று மாநில அரசாங்கங்கள் நின்று கொண்டிருக்கின்றன. ஒன்றிய அரசு சர்வாதிகாரமாய் இருக்கிறீர்கள். எஸ்.எஸ்.,ஏ. திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 585 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றிய அரசின் பங்கு 60%. அதாவது 2 ஆயிரத்து 151 கோடி ரூபாய்.



அந்த 2 ஆயிரத்து 151 கோடியிலே இந்த ஜுன் மாதம் முதல் தவணையாக 500 கோடி ரூபாய் வரவேண்டும். ஆனால் இன்று (ஆகஸ்டு 1) வரை அந்த நிதி தமிழ்நாட்டுக்கு வரவில்லை. அதற்கு என்ன காரணம்? பிரதம மந்திரி ஸ்ரீ ஸ்கூல்ஸ் என்ற திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. அது கிட்டத்தட்ட புதிய கல்விக் கொள்கையை ஒவ்வொரு மாநிலத்திலும் திணிக்கக் கூடிய திட்டமாக இருக்கிறது.

எங்களுடைய முதல்வர் தளபதி அண்ணன் ஸ்டாலின் அவர்கள் புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு ஏற்காது என்பதை திட்டவட்டமாக தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். கொள்கைக்காக தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய 500 கோடி ரூபாயை தர மறுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**எங்கள் முதல்வர் - மக்கள் பிரதிநிதி இல்லையா?**

இது எப்படி இருக்கிறது? எங்களிடம் இருந்து பணத்தை வாங்கி வைத்துக் கொண்டு, ’புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் உங்களுக்கு நிதி வழங்கப்படும்’ என்றால், நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லையா? தமிழ்நாடு அரசாங்கத்தை மக்கள் தேர்ந்தெடுக்கவில்லையா? எங்கள் முதலமைச்சர் மக்கள் பிரதிநிதி இல்லையா? நீங்கள் மட்டும்தான் மக்கள் பிரதிநிதிகளா? உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

உங்களுடைய இதே பிரதமர், குஜராத் முதலமைச்சராக இருந்தபோது மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்தார். பிரதமரானவுடன், மாநிலங்களின் உரிமைகளை பறிக்கக் கூடியவராக மாறியிருக்கிறார். எங்களுடைய கல்விக் கொள்கையிலே, எங்கள் நம்பிக்கையிலே, எங்கள் மக்கள் தேர்ந்தெடுத்த அரசாங்கத்தின் உரிமைகளிலே தலையிடுவதற்கு ஒன்றிய அரசாங்கம் யார் என்று நான் கேட்கிறேன்.

இங்கே பேசிய சிலர் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் மொழிக் கொள்கையை வைத்துக் கொண்டு அரசியல் செய்துகொண்டிருக்கிறது, ஏமாற்றுகிறது என்றெல்லாம் சிலர் சொன்னார்கள்.

**தியாகம் என்றால் என்ன வென்று தெரியாதவர்கள்!**

நான் கேட்கிறேன்... உலகத்திலே ஏதாவது ஓர் இனத்திலே மொழிப் போராட்டத்திலே உயிரை தியாகம் செய்த நூற்றுக் கணக்கானவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? இதெல்லாம் உங்களுக்கு தெரியாது, புரியாது. விடுதலைப் போராட்டத்தில் பங்குபெறாத உங்களுக்கெல்லாம் தியாகம் என்றால் என்னவென்று புரியாது.

கேந்திரிய வித்யாலயாக்களில் அங்கே இருக்கும் மாநில மொழியை கற்றுத் தருவோம் என்று சொல்கிறீர்கள். தமிழ்நாட்டில் 45 கேந்திரிய வித்யாலயாக்கள் இருக்கின்றன. இவற்றில் எப்படி தமிழ் சொல்லித் தருவீர்கள்? அங்கே படிக்கும் மாணவர்கள் இருபது பேர் சேர்ந்து தலைமையாசிரியரிடம் சென்று, எங்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுங்கள் என்று கோரிக்கை வைக்க வேண்டுமாம்.

அப்படி கோரிக்கை வைத்தால், தமிழை சொல்லிக் கொடுக்க ஆசிரியர் கிடைத்தால் தமிழ் சொல்லிக் கொடுப்பார்களாம். இது தமிழ்நாட்டிலே... நாங்கள் கோரிக்கை வைத்து கெஞ்சினால்தான் தமிழ் சொல்லிக் கொடுப்பீர்களாம். அப்படியும் மொத்தமுள்ள 45 கேந்திரிய வித்யாலயாக்களில் 15 இல்தான் தமிழ் சொல்லிக் கொடுக்கப்படுகிறது

**மொழிக் கொள்கையில் நியாயம் எங்கே?**

இப்படிப்பட்ட உங்களை நம்பி மொழிக் கொள்கையிலே நீங்கள் நியாயமாக நடந்து கொள்வீர்கள் என்று எப்படி நினைக்க முடியும்?

ரயில்வே ஸ்டேஷனில் போய் டிக்கெட் வாங்க முடியவில்லை. இந்தியைத் திணிக்கிறீர்கள். இந்தியை மட்டுமா சமஸ்கிருதத்தையும் திணிக்கிறீர்கள். இப்படிப்பட்ட நிலையில் எப்படி உங்களை நம்பி மொழிக் கொள்கையிலே நீங்கள் நியாயமாக நடந்து கொள்வீர்கள் என்று எப்படி நினைக்க முடியும்?

எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டின் பள்ளிகளிலே காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார். 1 லட்சத்து 14 ஆயிரம் குழந்தைகள் இதனால் பயன் பெறுகிறார்கள். பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதே தமிழ்நாடுதான். இதை நாங்கள் தலைநிமிர்ந்து பெருமையாக சொல்லிக் கொள்ள முடியும்.

ஆனால் பி.எம். போஷான் என்ற திட்டத்துக்கான மதிப்பீடு 11 ஆயிரத்து 600 கோடி ரூபாய் என நிர்ணயித்திருக்கிறது. அதில் குழந்தைகளுக்கு உணவு தர நீங்கள் ஒதுக்கீடு செய்திருப்பது 10 ஆயிரம் கோடி ரூபாய். இதற்கு கூட போதிய நிதியை ஒதுக்க முடியாத நீங்கள், எங்களுக்கு கல்வியைப் பற்றி சொல்லித் தருகிறீர்கள்? நாங்கள் அதை தலை வணங்கி ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

தேசிய அளவில் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வின்படி, பெண்கள் அதிக அளவு பள்ளிகளில் இருந்து இடை நிற்பதற்கு காரணம், அவர்கள் வீட்டு வேலை செய்ய வேண்டும் என்பதால். ஆண் குழந்தைகளின் இடை நிற்றலுக்கு காரணம் பொருளாதார பிரச்சினைகளுக்காக அவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

**புதிய கல்விக் கொள்கையை ஏற்கவே முடியாது!**

புதிய கல்விக் கொள்கையில் விஸ்வகர்மா என்ற திட்டத்தைக் கொண்டு வந்து இந்த பிள்ளைகள் படிக்கக் கூடிய வாய்ப்புகளை எல்லாம் மறுத்து... எந்த குலக் கல்வியை திமுகவும் திராவிட இயக்கமும் எதிர்க்கிறதோ, அதே குலக் கல்வி முறையை மீண்டும் கொண்டு வந்து அவர்களின் படிப்பை எதிர்காலத்தை நாசமாக்கும் புதிய கல்விக் கொள்கையை எங்களால் எப்படி ஏற்க முடியும்?

இதேபோல மொழித் திணிப்பை பற்றி சொல்வதென்றால் தெலங்கானாவில் ஏகலைவா மாடல் ஸ்கூலில் 47 பேர் வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் 44 பேர் ஹரியானாவில் இருந்து தெலங்கானாவுக்கு வந்திருக்கிறார்கள்? எப்படிப் படிப்பார்கள் அந்த பிள்ளைகள்? புதிய கல்விக் கொள்கை காரணமாக பழங்குடி பள்ளி குழந்தைகளின் கல்வியை கெடுக்கிறீர்கள்.

உயர் கல்வித் துறையில் ஒவ்வொரு ஆண்டும் கல்விக்கான நிதியை குறைத்துக் கொண்டே வருகிறீர்கள். தமிழ்நாட்டில் ஒரு மாணவன் இருந்தாலும் அவருக்காக பள்ளியை மூடாமல் நடத்திக் கொண்டிருக்கிறோம்,. ஆனால் புதிய கல்விக் கொள்கையில் க்ளஸ்டர்ஸ் ஸ்கூல் என்று சொல்கிறீர்கள். மாணவர்கள் குறைவாக இருக்கும் பள்ளிகளை மூடிவிட்டு, பல கிலோ மீட்டர் தூரம் தள்ளி மாணவர்களை எல்லாம் சேர்த்து கல்வி சொல்லித் தருவோம் என்கிறீர்கள். அப்படியென்றால் மலை கிராமங்களில் இருக்கும் பிள்ளைகள் எப்படி கல்வியை பெறுவார்கள்?

**கலைஞர் உருவாக்கிய கல்லூரிகள்!**

எங்கள் தலைவர் கலைஞர் ஒவ்வொரு ஊரிலும் சின்னச் சின்ன நகரங்களிலும்... கல்லூரிகளை உருவாக்கினார். உயர் கல்விக்காக பெரு நகரங்களை நோக்கி போக வேண்டாம் என்பதற்காகவே இதைச் செய்தார். இன்னும் நீங்கள் முப்பது வருடம் பொறுத்து 50 சதவிகிதம் மாணவர்களை உயர் கல்விக்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு கனவு கண்டு கொண்டிருக்கிறீர்களே அதை தமிழ்நாடு என்றோ தாண்டிவிட்டது. அந்த செயல் திட்டத்தை கொண்டு வந்த கலைஞரின் வழி வந்த ஆட்சி, உங்களின் புதிய கல்விக் கொள்கையை எப்படி ஏற்றுக் கொள்ளும்?

அதுமட்டுமல்ல... எங்கள் தமிழ்நாட்டிலே சாதாரண பிள்ளைகள், கிராமப்புற பிள்ளைகள் படிப்பதற்காக தலைவர் கலைஞர் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டுவந்தார். ஆனால் நீங்கள் நீட் பரிட்சையைக் கொண்டுவந்து எங்கள் பிள்ளைகளின் மருத்துவ கனவுகளை சிதைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எத்தனை மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்களின் தற்கொலை பற்றி உங்களுக்கு எந்த கவலையும் இல்லை.

**கோச்சிங் இண்டஸ்ட்ரியை வளர்க்கும் பா.ஜ.க. அரசு!**

ஏனென்றால் இந்த ஆட்சியில் ஒரே ஒரு தொழில் மட்டும் வளர்ந்திருக்கிறது. கிட்டத்தட்ட 5750 கோடி ரூபாய்க்கு கோச்சிங் இண்டஸ்ட்ரி மட்டும் வளர்ந்திருக்கிறது. 28 பரிட்சைகளை என்.டி.ஏ., நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த என்.டி.ஏ.வில் யாராவது ஒருவர் அரசு நிரந்தரப் பணியில் இருக்கிறாரா என்றால் இல்லை. இது என் கேள்விக்கு நீங்கள் தந்த பதில். இப்படி இருக்கும் போது அதில் வினாத்தாள் ரகசியத்தை எப்படி பாதுகாப்பீர்கள்?

புதிய கல்விக் கொள்கையில் சிலபஸை நீங்கள்தான் உருவாக்குவோம் என்கிறீர்கள். நாங்கள்தான் கலாச்சாரத்தை வரலாற்றை சொல்லித் தருவோம் என்கிறீர்கள். நீங்கள் சொல்லிக் கொடுக்கும் வரலாறு என்ன?

முகலாய மன்னர்களைப் பற்றி பேச மாட்டீர்கள். மகாத்மா காந்தி கொல்லப்பட்டது பற்றி உங்கள் அரசியல் வரலாறு பேசாது. தமிழ்நாட்டிலே இருக்கும் தலைவர்களைப் பற்றி பேச மாட்டீர்கள். பெரியாரைப் பற்றி நிச்சயமாக பேச மாட்டீர்கள். ஆனால், ஒரு தலைவர் அந்தமான் சிறையில் இருந்து புல்புல் பறவையில் இருந்து ஏறி பறந்து வந்தார் என்று உங்களுடைய பாடப் புத்தகம் சொல்லித் தருகிறது. இதையா நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திராவிட இயக்கம் என்பது காலம் காலமாக சாதி என்ற அமைப்பை ஒழிக்க வேண்டும் உடைக்க வேண்டும் என்று பாடுபடக் கூடியது. நீதிக் கட்சி, பெரியார், அண்ணா, கலைஞர், இன்று எங்கள் தலைவர் ஸ்டாலின் என இதற்காகவே பாடுபட்டு வருகிறார்கள். இந்த நிலையில் நேற்று இந்த நாடாளுமன்றத்திலே நடந்த ஒரு நிகழ்வு வேதனைப் பட வைக்கிறது.

ஒரு தாயின் வருத்தத்தோடு தங்கையின் வருத்தத்தோடு, சகோதரியின் வருத்தத்தோடு இதை பகிர்ந்துகொள்கிறேன். ஒரு பார்லிமென்ட் உறுப்பினர், இன்னொரு உறுப்பினரைப் பார்த்து கேட்கிறார்... ‘உனக்கு உன் சாதி என்ன என்று தெரியாது’ என்று கேட்கிறார். இதிலே என்ன பெருமை இருக்கிறது? சாதியற்றவராக வாழ்வது என்று சொல்வதுதான் பெருமை. இதுதான் திராவிட இயக்கத்தின் கொள்கை.

இதைவிட வருத்தப்படத் தக்க விஷயம் என்னவென்றால்... அந்த பேச்சை ஆதரித்து பாராட்டி இந்த நாட்டின் பிரதமர் பேசுகிறார். சாதியின் பெருமை குறித்து பேசுவதை பாராட்டுகிற, சாதி தெரியாதவர்களை இழிவுபடுத்துவதை ஏற்றுக் கொள்ளக் கூடிய பிரதமர் உருவாக்கும் சிலபஸ்சை தமிழ்நாடு என்றைக்கும் ஏற்காது. எங்கள் முதலமைச்சர் கடைசி வரை போராடுவார்... நாங்களும் போராடுவோம்”

இவ்வாறு நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.

---



தலைவாசல் ஒன்றியம் தேவியாக்குறிச்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை மத்திய ஒன்றிய செயலாளர் சாத்தப்பாடி மணி தொடங்கி வைத்தார். இந்த முகாமில் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டது. இதில் வட்டாட்சியர் பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.குணசேகரன்,மாவட்ட பிரதிநிதிகள் மு.தேவேந்திரன்,ரா.பாஸ்கரன்,செ.காசிலிங்கம், ஒன்றிய பொருளாளர் ரமேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் சித்தேரி ப.கண்ணுசாமி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

### பண்ருட்டியில் 1500 மாணவர்கள் பங்கேற்ற

## சிலம்பம் விளையாட்டுப் போட்டி!

### நகர்மன்றத் தலைவர் க.இராஜேந்திரன் துவக்கி வைத்தார்!

பண்ருட்டி, ஆக.3 -

தமிழ்நாடு வீரத்தமிழர் தற்காப்பு சிலம்பம் விளையாட்டு கலைக்கூடப் பேரவை சார்பில்1500 மாணவர்கள் 33 நிமிடம் சிலம்பம் சுழற்றி மாபெரும் ராயல் புக் ஆப் உலக சாதனை நிகழ்ச்சி பண்ருட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

பண்ருட்டி நகர மன்ற தலைவர் , நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் கலந்து கொண்டு தலைமை தாங்கி, தற்காப்பு கலை நிகழ்ச்சியை சிலம்பம் விளையாடி துவக்கி வைத்தார்.

காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வி.பழனி, வணிகர்சங்கங்களின் பேரவை செயலாளர் வி.வீரப்பன் ,பள்ளி தாளாளர்கிருஷ்ணமூர்த்தி, அசோக்ராஜ்ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவள்ளுவர் முத்தமிழ் சங்கத்தின் கௌரவத்தலைவர் முனைவர் சஞ்சீவிராயர், ஆட்சிமன்ற குழு புலவர் இரத்தின ஆறுமுகம், பெற்றோர் ஆசிரியர் சங்க துணைத்தலைவர் ஏ.வி.லோகநாதன், கே. பழனி, தேசியமாணவர் படை முனைவர் ராஜா, பள்ளி தாளாளர்கள் சேரன், கலைமோகன், மா.நடராஜன்,நகர இளைஞரணி அமைப்பாளர் ஏ.சம்பத் மற்றும் காவல் துறை ஆய்வாளர் , வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் , ரோட்டரி சங்க நிர்வாகிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் , மாணவ செல்வங்கள் அனைவரும் கலந்து கொண்டு இந் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்ப ஆசான் கலைரத்னா ஏ.எஸ்.சிகாமணி செய்திருந்தார்.






தமிழ்நாடு வீரத்தமிழர் தற்காப்பு சிலம்பம் விளையாட்டு கலைக்கூடப் பேரவை சார்பில் 1500 மாணவர்கள் 33 நிமிடம் சிலம்பம் சுழற்றி மாபெரும் ராயல் புக் ஆப் உலக சாதனை நிகழ்ச்சி பண்ருட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. பண்ருட்டி நகர மன்ற தலைவர், நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் கலந்து கொண்டு தலைமை தாங்கி, தற்காப்பு கலை நிகழ்ச்சியை சிலம்பம் விளையாடி துவக்கி வைத்தார். காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் வி.பழனி, வணிகர் சங்கங்களின் பேரவை செயலாளர் வி.வீரப்பன், பள்ளி தாளாளர் கிருஷ்ணமூர்த்தி, அசோக்ராஜ் ஜெயின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருவள்ளுவர் முத்தமிழ் சங்கத்தின் கௌரவத்தலைவர் முனைவர் சஞ்சீவிராயர், ஆட்சிமன்ற குழு புலவர் இரத்தின ஆறுமுகம், பெற்றோர் – ஆசிரியர் சங்க துணைத்தலைவர் ஏ.வி.லோகநாதன், கே.பழனி, தேசியமாணவர் படை முனைவர் ராஜா, பள்ளி தாளாளர்கள் சேரன், கலைமோகன், மா.நடராஜன்,நகர இளைஞரணி அமைப்பாளர் ஏ.சம்பத் மற்றும் காவல் துறை ஆய்வாளர், வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் , ரோட்டரி சங்க நிர்வாகிகள் , அரசியல் கட்சி பிரமுகர்கள், மாணவ செல்வங்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிலம்ப ஆசான் கலைரத்னா ஏ.எஸ்.சிகாமணி செய்திருந்தார்.